போன்ற படிப்புகள் படிக்கும் ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு இந்த உதவித் தொகை கொடுப்பதில் முன் உரிமை கொடுத்து வழங்கப்படுகிறதா ? அது எவ்வளவு தொகை வழங்கப்படுகிறது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பின் தங்கிய, மிகவும் பின் தங்கிய, ஆதிதிராவிடர்களுக்கான படிப்பு உதவித் தொகைகளை அந்தந்தத் துறையினர் முறையாக வழங்கி வருகின்றனர். அது பற்றிய முழு விவரம் தெரிய வேண்டுமென்றால் தனிக் கேள்வியாகப் போட்டால் அந்த அமைச்சர் பதில் சொல்வார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:—வினா எண் 544 டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு கல்வியமைச்சர்.

544—

தமிழ்நாட்டில் கல்வித்துறையில் மூன்றடுக்கு முறை.

* 10438—டாக்டர் அ. ஸ்ரீதரன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் கல்வித் துறையில் மூன்றடுக்கு முறை (Three-tier System) செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கல்வித்துறையில் நடைமுறையிலிருந்த மூன்றடுக்கு முறை ஆசிரியர் ஆலோசனைக் குழு மாற்றம் செய்யப்பட்டு நான்கடுக்கு முறை ஆலோசனைக் குழு அறிமுகப்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ‘‘ த்ரீ டையர் சிஸ்டம் ’’ இன்று எஜுகேஷனில் வந்து இங்கிலாந்திலே மிகவும் பிரசித்தம் பெற்று அது சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நம்முடைய தமிழகத்திலே ‘‘ த்ரீ டையர் சிஸ்டம் ’’ என்ற முறையைக் கடைப்பிடிப்போமானால் மாணவ மாணவியர்கள் தகுந்த பாடங்களைப் படிப்பது மட்டுமல்லாமல் ‘ பார்ட் டைம் ஜாப் ’ ஆக அந்தப்பள்ளிச்

1993 ஏப்ரல் 30]

சாலையிலே ஏதாவது ஒரு புரொபெக்ஷனைச் செய்து செல்ஃப் சஸ்டெயினிட்டி என்ற நிலையை உருவாக்குகின்ற ஒரு நல்ல சந்தர்ப்பம் உண்டாகும் என்பதால் நம்முடைய கல்வித் துறையில் 'த்ரீ டையர் சிஸ்டம்' என்ற முறையை வலிவுபடுத்த நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசிலே இன்று நடைமுறையிலே இருக்கின்ற 3 அடுக்குத் திட்டம் என்று நான் குறிப்பிட்டதும் 4 அடுக்குத் திட்டம் என்று நான் குறிப்பிட்டதும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியைப் பார்க்கிறபோது வேறாக இருப்பதுபோல் தெரிகிறது. அதை விளக்கமாக தனிக் கேள்வியாகப் போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய பாரத நாட்டின் ஒருமைப்பாட்டையும், ஒற்றுமையையும் நம்முடைய தமிழ்நாட்டில் மறுமலர்ச்சியையும் பேணிக் காக்கின்ற வகையில் நம்முடைய கல்வித் துறையில் புதிய புனிதமான மறுமலர்ச்சியைச் செய்வதற்கு ஏதேனும் திட்டங்கள் நம்முடைய கல்வித் துறையின் சார்பாக ஆய்வில் உள்ளதா ? ஆம் எனில், அதைச் செயல்படுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ, அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேசிய ஒருமைப் பாட்டிற்கு என்ன செய்யலாம் என்ற அடிப்படையிலே நாம் சிந்தித்துப் பார்த்துத்தான் தேச பக்தியை ஒரு பாடமாக வைப்பது என்று முடிவெடுத்திருக்கிறோம், அது இந்த ஆண்டு முதல் அமலுக்கு வரும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 545, திரு. தி. சாத்தையா, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

545—

சுந்தரராஜபுரம் உயர்நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக உயர்த்துதல்

* 11009—திரு. தி. சாத்தையா :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) இராஜபாளையம் தொகுதியைச் சேர்ந்த சுந்தர ராஜபுரத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?